7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

95. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் *15-11-2002* ஆம் நாளிட்ட 131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

96. வருவாய்த் துறையின் *30-5-1962* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட SRO. *2437/1962* ஆம் எண் அறிவிக்கையில் (இது பின்னர் திருத்தப்பட்டது) திருத்தம் செய்தது குறித்து வணிக வரித் துறையின் *19-11-2002* ஆம் நாளிட்ட *134* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

97. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரித் துறையின் *25-11-2002* ஆம் நாளிட்ட *135* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

98. செல்லுலார் தொலைபேசிகளின் விற்பனை குறித்து *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரித் துறையின் *24-12-2002* ஆம் நாளிட்ட *144* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959*ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

99. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் *23-1-2003* ஆம் நாளிட்ட *6* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

2003 மே 6]

100. வணிக வரித் துறையின் *1-7-2002* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II *(2)/வ.வ./568 (F-5)/2002* ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்து வணிக வரித் துறையின் *31-1-2003* ஆம் நாளிட்ட *8* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

101. செல்லிடத் தொலைபேசிகளின் (Cellular telephones) விற்பனை மீது *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் *3* ஆம் பிரிவைச் சேர்ந்த *(2)* உட்பிரிவின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியை நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்தும் பதினொன்றாவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஏவியேஷன் கேசோலின், ஏவியேஷன் ஜெட் எரிபொருள், டர்பைன் எரிபொருள், பெட்ரோல், உயர்வேக டீசல், இலேசான டீசல் எண்ணெய் ஆகியவற்றின்மீது செலுத்தத்தக்க வரியின் மீதான இச்சட்டத்தின் *3*-I ஆம் பிரிவின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க மேல்வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் மற்றும் ஏவியேஷன் கேசோலின் ஜெட் எரிபொருள் உட்பட ஏவியேஷன் டர்பைன் எரிபொருள், இலேசான டீசல் எண்ணெய் ஆகியவற்றின் விற்பனை அல்லது கொள்முதல் மீது *1970* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் வணிக வரித் துறையின் *21-3-2003* ஆம் நாளிட்ட *26* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *1/1959*) *53(5)* பிரிவு மற்றும் *1970* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் *14/1970*) *4(3)* பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

102. சென்னை-17, தியாகராய நகரில் உள்ள கண்ணம்மாப்பேட்டை இடுகாட்டில் நிறுவுவதற்காக, சென்னை தியாகராயநகர் திருவாளர்கள் பரம்சாந்தி நிலையத்திற்கு *30* மீட்டர் உயரமுள்ள புகைப்போக்கி வசதியுடன் (Chimney) அமைந்த சுத்திகரிப்பு அமைப்புடன் கூடிய மின் தகன மேடையை அமைப்பது தொடர்பாக, *1959* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க (இருபது இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து அறுபது ரூபாய்க்கு மேற்படாமல்) வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக

[2003 மே 6

வரித் துறையின் 25-3-2003 ஆம் நாளிட்ட 31 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

103. மதுரையைச் சேர்ந்த (பதிவு எண்.49/79) ஏலாமையுற்றோருக்கான, 'திருவாளர்கள் ஹெலன் கெல்லர் பணிச்சங்கம்' மேற்கொள்ளும் உறை (envelope) தயாரிப்புத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வது தொடர்பாக, மேற்சொன்ன சங்கம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரித் துறையின் 25-3-2003 ஆம் நாளிட்ட 32 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

325. மானியக் கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

326. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய செயலாக்க வரவு - செலவுத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

327. மானியக் கோரிக்கை எண் 7 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

328. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன் வளம் பற்றிய செயலாக்க வரவு - செலவுத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

329. மானியக் கோரிக்கை எண் 8 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

330. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான தமிழக அரசின் கொள்கை 2003 என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்